**வடமேல் மகாண சபை - 2021**

------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-------------------------------------------------------

வடமேல் மாகாண சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2022 நவம்பர் 28 ஆந் திகதி வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஒக்தோபர் 31 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் சமர்ப்பிதற்காக ஆளுனருக்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வட மேல் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்குரிய மேலும் கிடைக்க வேண்டிய நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டண வருமானம் இனங் காணப்பட்டு நிதி கூற்றுக்களுக் கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டிற்கான 2022 ஆம் ஆண்டு கிடைத்திருந்த நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டண வருமானம் முறையே ரூபா 107,157,442 மற்றும் ரூபா 340,745,508 ஆக இருந்தது. | மீளாய்வாண்டிற்குரிய கிடைப்பதற்குள்ள நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கட்டணங்கள் அடுத்த ஆண்டின் ஜனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் வழங்குமாறு குறித்த நீதிமன்றத்திடம் கோரப்பட்டுள்ளது. அவ்வாறே முத்திரை கட்டண வருமானங்கள் தொடர்பாகவும் ஏதேனும் நடைமுறை யொன்றை தயாரிப்பதற்கு மாகாண இறைவரி ஆணையாளருடனும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ஆண்டுக்குரிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள் இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் தனியார் மருத்துவ நிலையங்களை பதிவு செய்வதற்காக மீளாவாண்டிற்குரிய வருமானம் ஆன ரூபா 1,516,750 மற்றும் பெற வேண்டிய வருமான ஆன ரூபா 8,525,240 தொகைகள் நிதி கூற்றுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.. | தனியார் மருத்துவ சேவைகள் ஒழுங்குபடுத்தல் ஆணை குழுவினால் தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் போது கிடைக்கும் வருமானத்தை மாகாண சுகாதார சேவை பணிப்பாளரின் விஷேட கணக்கொன்றில் செலவில் வைக்கப்படுகின்றது. இத்தொகையை மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்குமாறு மருத்துவ சேவைகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது | இவ் வருமானம் மாகாண சபை வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 98,489,013 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா 107,685,317 தொகை பொறுப்புக்களாக நிதி கூற்றுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்குரிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை நிதி கூற்றுக்களில் பதிவு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | ஆண்டின் இறுதியில் காணப்படும் பொறுப்புக்கள் நிதி கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | மாகாண சபை நிதி கூற்றுக்கள் மற்றும் அந்தந்த செலவின தலைப்புகளுக்குரிய நிதி கூற்றுகளில் மீளாய்வாண்டின் இறுதியில் ஆன மீதிகளுக்கிடையே இரண்டு செலவின தலைப்புகளுக்குரிய நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 84,333,580 கூட்டு பெறுமதியான வேறுபாடொன்று காணப்பட்டது | பிரதான அமைச்சுக்குரிய வானனமொன்றின் பெறுமதி ரூபா 67,500,000 ஆல் கூடுதலாக பதிவு செய்யப்பட்டமை மற்றும் பிரதான செயலாளர் அலுவலகத்தின் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் ஆரம்ப மீதி ரூபா 16,833,580 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்காமை இதற்கான காரணமாக இருந்தது. | சொத்துக்கள் திட்டவட்டமாக இனங் கண்டு நிதிக் கூற்றுகளுக்கு உள்ளடக்கப்பட வேண்டும். |
| (உ) | இரண்டு செலவின தலைப்புகளுக்குரிய நிலையான சொத்துக்களின் கீழ் சொத்துக்கள் மீள் மதிப்பீடு பெறுமதியான ரூபா 565,238,100 தொகை நிதிக் கூற்றுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | மாகாண கூட்டுறவு திணைக்களத்தின் வாகனங்களுக்குரிய ரூபா 11,665,000 ஆன மதிப்பீட்டு பெறுமதி தவறுதலாக நிதி கூற்றுக்களில் கொண்டு வரப்படாமையால் மாகாண சுகாதார திணைக்களத்தின் காணிகளுக்குரிய ரூபா 553,573,100 தொகையான மதிப்பீட்டு பெறுமதிகளுக்காக மாகாண திறைசேரி வழங்கும் ஆலோசனையின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் மாகாண நிச்சயிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக் களத்தினால் மேற் கொள்ளப்பட்ட ரூபா 11,334,155 ஆன நிர்மாணங்கள் நிதி கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | இவ்வாண்டின் போது குறித்த கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லாத சொத்துக்கள் பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் திட்டவட்டமாக இனங்காணப்பட்டு நிதி கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (எ) | வடமேல் மாகாண வீடமைப்பு மற்றும் நிர்மாண திணைக்களத்தின் ரூபா 1,682,550 ஆன கணனி உபகரணங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களுக்கு ரூபா 337,550 என ரூபா 1,345,000 குறைத்து கொண்டு வரப்பட்டிருந்தது. | அரச பிரிவுகளின் நிதியல்லா சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை இவ் ஆண்டில் மேற்கொள்வதற்கும் அதன் பிரகாரம் சொத்துக்கள் பதிவேட்டை நாளவது வரை யாக்குவதற்கும் அதற்கு இணங்க 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் கீழ் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பெறுமதி சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு உரியதாக காணப்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் காணி மற்றும் மோட்டார் வாகனங்களின் பெறுமதி முறையே ரூபா 19,623,580 தொகையும் ரூபா 153,094,463 தொகையும், ரூபா 79,250,000 தொகை குறைத்தும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 59,285,535 தொகை கூடுதலாகவும் நிதிக்கூற்றுகளுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. | குறித்த அட்டவணைகளுடன் ஒப்பிட்டு அடுத்த நிதி கூற்றுகளைத் தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பெறுமதி சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளடங்களாக அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வட மேல் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- நடைமுறையாக விடுபடல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டில் விடுபாடுகள் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 201 – வடமேல் மாகாண ஆளுனர்

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஜூலை 01 ஆம் திகதி விபத்திற்குட்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனம் ஒன்று தொடர்பாக வெளிப்படுத்தல் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டிலும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இந்த விபத்து தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் குறித்த சாரதியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,420,728 ஆக இருந்தது. | இத்தொகையை 2022 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன் செலுத்துமாறு சாரதிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக பதில் கிடைக்காததால் சாரதிக்கு எதிராக தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 தலைப்பு – 202 - வடமேல் மாகாண சபை

**சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபை சட்டத்தில் அதிகாரம் அளிக்கப்படா திருக்கையில் முன்னால் பாராளுமன்ற அமைச்சர் | 2021 ஆம் ஆண்டிற்காக அலுவலகத்தில் கிடைத்த நிதி ஏற்பாடு மூலம் கொடுப்பணவு செய்ய இயலுமை இல்லாது | செலவினங்களை மேற்கொள்ளும் போது மாகாண சபை சட்டத்தின் |

| | | |
|---|---|---|
| ஒருவரின் இறுதிக்கிரியைக்காக ரூபா 200,000 தொகை மாகாண நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. | இருந்தமையால் மாகாண திறைசேரியிடம் விசாரித்து குறை நிரப்பு மதிப்பீடொன்றின் மூலம் நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்து கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

.

**1.5.3 தலைப்பு - 203 - வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பரீட்சைகளை நடாத்துவதற்குரிய விண்ணப்பங்களை கோருதல், வினா பத்திரங்களை தயாரித்தல், பரீட்சை நிலையங்களை செயல் படுத்துதல், விடை பத்திரங்களை மதிப்பீடு செய்தல், பெறுபேறுகளை வெளியிடுதல் போன்ற கட்டுப்பாட்டு முறைமையை முறைப்படுத்துவதற்கு தேவையான செயற்பாட்டு விதி கோவை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக் குழுவின் பரீட்சை ஒழுங்குமைப்பு கோவையை தயாரிப்பது இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் அதை மாகாண சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் வடமேல் மாகாண பிரதான செயலாளரின் மூலம் கௌரவ ஆளுநர் அவர்களின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | பரீட்சைகளை நடாத்துவதற்கு விண்ணப்பங்களை கோருவதுடன், பெறுபேறுகளை வழங்கும் வரையான செயற்பாடு குறிப்பிடப்பட்டு காணப்படும் கட்டுப்பாடுகளை ஸ்தாபிக்கப்பட்டு முறையான கண்காணிப்பு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.4 தலைப்பு 210 - வட மேல் மாகாண பிரதான அமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை சட்டம் மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி மற்றும் நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சர்**

**(அ) ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வடமேல் மாகாண ஜனகலா கேந்திரத்தின் கேட்போர் கூடத்தை மீண்டும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கு உரிய மதியுரை சேவையை பெற்றுக் கொள்வதற்காக மதியுரை நிறுவனம் ஒன்றுடன் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் திகதி பிரதான அமைச்சுக்கு இடையே உடன்படிக்கையின் பிரகாரம் திட்டங்களை தயாரித்தல், ஒப்பந்த ஆவணங்களை தயாரித்தல் மற்றும் ஒப்பந்தம் வழங்குதல் 2016 நவம்பர் 27 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டு நிர்மானம் 2017 நவம்பர் 27 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2018 செப்டம்பர் வரை திட்டத்தை வழங்குதல் தாமதித்த காரணத்தால் நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு 2019 ஜூலை 23 ஆம் திகதி வரையான காலம் எடுத்தமை அடிப்படையில் விலை அதிகரிப்பிற்காக ரூபா 3,635,538 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 4,940,000 ஆன தாமதம் கட்டணமொன்றையும் அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் வடமேல் மாகாண ஜனகலா மண்டத்தின் ஒட்டுமொத்த நில திட்டம் ஒன்றின் கீழ் மீண்டும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்காக உள்ளக வடிவமைப்பு திட்டமிடப்பட்டு அதற்காக கட்டமைப்பு திட்டங்கள் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் முதலில் கேட்போர் கூடத்தின் நிர்மானம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது அதன் காரணமாக கேட்போர் கூடத்தின் உள்ளக வடிவமைப்பு திட்டம், கட்டமைப்பு தயாரித்தலில் தாமதம் இருந்தது. | உடன்படிக்கை காலப்பகுதியில் குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) நோக்கங்களுக்கு முரணான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கல்வி முறைமை சீர்திருத்தம் பலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் நோக்கில் செயற்படுத்தப்பட்ட சாதாரண கல்வி நவீன செயற்கை திட்டத்தின் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்கு முரணாக வடமேல் மாகாணத்தின் 8 கல்வி அலுவலகங்களின் Payroll முறைமைக்காக ரூபா 4,988,880 தொகை செலவிடப்பட்டு Epson DF X 9,000 அளவிலான 8 கணனி அச்சீட்டு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | மாகாண மற்றும் வலயக்கல்வி அலுவலகங்களுக்காக டொட் மேட்ரிக்ஸ் அச்சீட்டு இயந்திரங்கள் ஆசிரியர்களுக்காக சம்பளம் பட்டியல்களை வழங்குகும் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டன. இத்தேவைப்பாடு DLI 8 ஆசிரியர்களின் வேலை செய்யும் இயலளவை அதிகரித்தல் போன்ற தேவை பாட்டின் பேரில் நிறைவேற்றப்பட்டது. இந்த வசதிகளை வழங்குவதன் மூலம் ஆசிரியர்களை திருப்திகரமாக சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பொதுவான கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் நோக்கத்திற்கான செயற்பாடுகள் செயல்படுத்தப்பட்ட வேண்டும். |

## 1.5.4.1 வடமேல் மாகாண முன்பள்ளி பருவ கல்வி அபிவிருத்தி அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் நிர்வகிக்கப்படும் முன்பள்ளி பாடசாலைகள் மற்றும் தனியார் முன்பள்ளி பாடசாலைகள் தரத்தினை நிர்ணயிப்பதற்கும் அதற்காக முகாமைத்துவ தரங்களை நியமங்களை ஏற்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்குரிய சாசனத்தில் திருத்தம் தயாரிக்கப்பட்டிருந்த போதும் தற்போது மாகாண சபை கலைக்கப்பட்டுள்ளதால் மீண்டும் திருத்தம் செய்வதற்கு இயலுமை காணப்படவில்லை. அதற்காக தேவையான பின்னணி தயாரிக்கப்பட்ட உடன் சாசனத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சாசன திருத்தங்கள் தேவைப்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அதிகாரசபையால் 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் அச்சிடப்பட்டு முன்பள்ளி பாடசாலைகளின் வேலை புத்தகங்களில் மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத ரூபா 1,685,056 ஆன முன்பள்ளி பாடசாலை வேலை புத்தகங்கள் எஞ்சி இருந்தன. | இந்த புத்தக இருப்பினை சிறுவர்களுக்கு இடையே இலவசமாக பகிர்ந்து அளிப்பதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கு முடியாததால் ஏனைய நடைமுறை ஒன்றை எடுப்பதற்கு முகாமைத்துவ சபைக்கு பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு கணிப்பீட்டு சபை நியமிக்கப்பட்டுள்ளது. அக்கணிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் விரைவில் புத்தகங்களை மாணவர்களுக்கிடையே பகிர்ந்து அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைப்பாடி இனம் காணப்பட்டு அதன் பிரகாரம் வேலை புத்தகங்கள் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.4.2 வடமேல் மாகாண கைத்தொழில் சேவைகள் பணியகம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பணியகத்தில் மொத்தம் ரூபா 128,146,550 தொகையான 18 சொத்துக்கள், பொறுப்புக்களை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் காலப் பகுப்பாய்வு என்பன சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.5.4.3 வடமேல் மாகாண ஜனகலா மன்றம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மன்றத்தின் நோக்கங்கள் வடமேல் மாகாண பாரம்பரிய கலைச் சிற்பத்தை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் அவ்வாறான கைத்தொழில்களை மேம்படுத்த வேண்டிய போதிலும் மீலாய்வாண்டில் மன்றத்தினால் | பித்தளை, தோல், பத்திக் போன்ற உற்பத்திகளில் வடமேல் மாகாணத்தில் இல்லாதமையால் கூடுதலான விலையுடன் கூடிய பொருட்களை வடமேல் மாகாணத்திற்கு வெளியில் இருந்து கொள்வனவு செய்வதற்கு | சாசனத்தின் பிரகாரம் வடமத்திய மாகாணத்தின் பாரம்பரிய கலைச் சிற்பத்தை பாதுகாத்தல் மற்றும் அவ்வாறான |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்த பொருட்களில் 34 சதவீதம் ரூபா 1,389,470 தொகை வடமேல் மாகாணத்தில் இருந்து வட மத்திய மாகாணத்திற்கு வெளியே வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | நேர்ந்தது. | உற்பத்தியை விரிவுபடுத்தல் அடிப்படை நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டும். |

### 1.5.4.4 வடமேல் மாகாண மனிதவள அபிவிருத்தி அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபை மூலம் 9 வங்கி கணக்குகள் பேணப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்ததுடன் அக் கணக்குகளுக்கு இடையே முறையான நிதி முகாமைத்துவம் இடம்பெறாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபைக்கு சொந்தமான தேறிய பண மீதி ரூபா 42,771,486 ஆக இருந்த போதும் அத் திகதியில் உள்ளவாறு ரூபா 13,318,195 ஆன வங்கி மேலதிகப்பற்று ஒன்று கணக்கில் காணப்பட்டதுடன் அம் மேலதிகப் பற்று வட்டி மற்றும் வங்கி கட்டணமாக ரூபா 1,343,876 ஆன தொகை ஒன்று அதிகாரசபைக்கு ஏற்க நேர்ந்திருந்தது. | சுழற்சிக் கடன் செயற்திட்டத்தின் கீழ் நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றை செயற்படுத்துவதால் இவ்வாறான வங்கிக் கணக்குகள் பேணி செல்லப்பட்டதுடன் பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைக்குரிய ஒவ்வொரு மாதத்திலும் 10 ஆம் திகதி சம்பளமும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதியமும் செலுத்த வேண்டிய போதிலும் அரசு நிறுவனங்களில் இருந்து உரிய திகதியில் பணம் கிடைக்காமையால் வங்கி மேலதிக பற்று வசதிகள் பெற்றுக் கொள்வதற்கு நேர்ந்தது. | தேவைப்பாட்டின் பிரகாரம் வங்கி நடைமுறை கணக்கு நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் பிரதான செயற்பாட்டு வருமானமான பாதுகாப்பு சேவை மற்றும் சுத்திகரிப்பு சேவையின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் முறையே ரூபா 7,130,611 மற்றும் ரூபா 36,717,314 ஆன நிலுவை | எமது சேவை வசதிகள் மிகவும் வறிய மக்கள் தொகுதிக்காக வழங்குவதாக இருந்ததுடன் அம் மக்கள் தொகுதிக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக தாக்கங்கள் உடனடியாக தாக்கம் செலுத்தக்கூடியதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| வருமானம் காணப்பட்டது. | உள்ளது. தற்போது எம்மால் முகம் கொடுக்கப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போதும் காணப்படும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக செயற்பாட்டுகள் பின்பற்றப்பட்டுள்ளன. |

**1.5.4.5 வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் பகுப்பாய்வாளர் பதவி அங்கீகரிக்கப்பட்ட பதவியனியின் பதவி ஒன்றாக இருந்த போதும் அப் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் ஆய்வுகூட நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,208,000 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் வருடக்கணக்காக பயன்பாடிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த பதவியை நிரப்புவதற்கும், உபகரணங்களை பயனுள்ள செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.4.6 வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வடமேல் மாகாணத்திற்குள் சாதகமான சுற்றாடல் ஒன்றை கட்டியெழுப்பும் நோக்கில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 53.3 மில்லியன் செலவிடப்பட்டு | "Colombo sanctuary Resort" தனியார் நிறுவனத்திற்கு 10 வருட காலத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் நீர் சிக்கல்கள் காரணமாக நீர் வழங்கல் | சொத்துக்களை ஆக்கப்பூர்வமாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்ட சுற்றுலா நிலையம் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக எவ்வித வருமானமும் உழைக்காமல் குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டு எஞ்சிய நிர்மானங்கள் பூர்த்தி செய்யப்படும் வரை இதில் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. | |
| (ஆ) | அதிகார சபைக்குரிய புத்தளம் மெரிடைம் ஹெரிடேஜ்" விடுமுறை கேந்திரத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,162,183 ஆன செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் உழைக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 202,620 மாத்திரம் ஆகும். | இக் கட்டிடத்தை கடற்படையின் விடுமுறைக் கேந்திரமாக பேணிச் செல்வதற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் பணிப்பாளர் சபை இணக்கத்தை தெரிவித்துள்ளதுடன் அதற்குரிய கடிதங்கள் தற்போது கடற்படை தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அடுத்து வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றுலா கேந்திரத்தை இலாப உழைக்கும் நிலைக்கு கொண்டு வருவதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.4.7 வடமேல் மாகாண இயந்திர அதிகாரசபை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் கட்டணங்கள் அடிப்படையில் வரி அறவிடப்பட்டு மாதத்திற்கு பின்னர் வரும் மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலுமத் மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கும் உரிய செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 10,204,725 ஆன வரித் தொகையை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய வரிகளில் பொருளாதார சேவைகள் கட்டணங்கள் மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி என்பன நிறுவனத்தின் தற்போது காணப்படும் நிதி சிக்கல் அடிப்படையில் கொடுப்பனவு தவிர்ப்புச் | குறித்துரைத்த காலப்பகுதியில் வரிகளை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்டிருந்ததுடன் நிலைமை சீரானவுடன் கொடுப்பனவு செய்யப்படும். | |
| (ஆ) | அதிகாரசபையின் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட கடன்பட்டோர் மீதியான ரூபா 66,166,834 தொகையில் 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து வரும் ரூபா 7,049,985 ஆன நிலுவை செயற்பாட்டு வருமானமொன்றும் 2009 – 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மொத்தம் 739,755 ஆன நிலுவை திருத் வருமானமொன்றாகும். | நிலுவைத் தொகையில் தொடர்ந்தும் அறவிடப்படாத கடன் மீதியாக கணக்குகளில் காணப்படுவதால் மாகாண திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்று கணக்குகளிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.5 தலைப்பு 211- வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற திணைக்களம்

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 2009 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 1,283,900 ஆன 04 மிகை அறவீடுகள் தொடர்பாக துரித நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொல்பிதிகம பிரதேச சபைக்கு உரியதாக பிறப்பிக்கப்பட்டுள்ள மிகை அறவீடு தொடர்பாக மேன்முறையீடு உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் பரிந்துரை உள்ளடக்கப்பட்ட அறிக்கை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக அறிவிக்கும் தீர்மானத்தின் பிரகாரம் அடுத்து வரும் நடவடிக்கை எடுக்கப்படும். | மிகை அறவீடு தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் தாமதம் இன்றி எடுக்கப்பட வேண்டும். |

**1.5.6. தலைப்பு 212 - வடமேல் மாகாண பொறியியலாளர் திணைக்களம்**

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | பரிந்துரை |
|---|---|---|
| வெவ்வேறு தரப்பினரால் 28 சந்தர்ப்பங்களின் போது திணைக்களத்தில் வைப்பு செய்யப்பட்டிருந்த ரூபா 7,723,055 கூட்டுத் தொகையான வைப்புக்கள் 02 ஆண்டுகள் முதல் 04 ஆண்டுகள் வரையான காலப் பகுதியொன்று கடந்திருந்த போதும் செயற்திட்டங் களுக்குரிய குறைபாடுகளை சரிசெய்வதற்கும் அவ்வாறு இல்லா விட்டால் குறித்த தரப்பினருக்கு திருப்பி செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த மதிப்பீடுகளில் இருந்து அனேகமானவை தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை 28 வைப்புக்களுக்குரிய ரூபா 7,723,055 மாத்திரம் வைப்புக் கணக்கில் உள்ளது. இம்மீதிகளை குறித்த நிர்மான செயற்திட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை திருத்தம் செய்வதற்கு பயன்படுத்துவதற்கு உள்ளனவாகும். | செயற்திட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.7 தலைப்பு 213 - வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்**

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்குள்ள அல்லது விட்டு விட வேண்டியதாக காணப்படும் ரூபா 5,202,393 கூட்டுப்பெறுமதியான 32 சம்பவங்களில் 10 ஆண்டுகளைக் கடந்த ரூபா 871,370 கூட்டு பெறுமதியான 04 சம்பவங்களும் உள்ளடக்கப்பட்டு இருந்த | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு உரிய ரூபா 199,370 தொகையை அறவிடுவதற்காக ஓய்வூதிய பணிப்பாளருக்கு அறிவிப்பதற்கும் ரூபா 12,000 ஆன நட்டத்தை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 660,000 ஆன கணனி திருட்டுக்குரிய நட்டம் தொடர்பாக இதுவரை | குறித்த தீர்மானங்களை தாமதம் இன்றி மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

போதும் அது தொடர்பாக துரித தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருக்க நடவடிக்கையொன்று வில்லை.
எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்வு செய்யப்படாத கணக்காய்வு பந்திகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கிரியுல்ல வலயக் கல்வி அலுவலகத்தில் 2007-2010 காலப்பகுதியில் இடம் பெற்றிருந்த ரூபா 13.18 மில்லியன் நிதி மோசடிக்குரிய பொறுப்பான தரப்பினர் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டிய நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இம்மோசடிக்கு பொறுப்புக் கூற வேண்டிய ஒரு தரப்பினரான கிரியுல்ல மக்கள் வங்கியுடன் பணத்தை அறவிடுவது தொடர்பாக கலந்துரை யாடப்பட்டு வருவதாக தயவுடன் அறியத் தருகிறேன். | நட்டத்தை அறவிடுவதற்கும் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | இப்பாகமுவ வலயக் கல்வி அலுவலகத்தில் 2007-2010 காலப்பகுதியில் பொது மற்றும் ஆசிரிய சம்பளம் நடைமுறை கணக்குகளுக்கு உரிய வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்படாமை தொடர்பாக விசேட புலனாய்வு அறிக்கையின் பரிந்துரைகள் இதுவரை செயல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | விசேட புலனாய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் குறித்த வங்கிக் கணக்கு தொழிற்பாடு மற்றும் அந்த செயற்பாட்டில் இடம் பெற்றிருந்த முறை கேடுகள் தொடர்பாக நேரடியாக மற்றும் மறைமுகமாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்வதற்கு மாகாண அரசாங்க சேவை ஆணை குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | பொறுப்பான தரப்பினர்களை இனங் காணுதல் மற்றும் குறித்த நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டும். |

**(இ) மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மஹவ கல்வி வயல அதிகாரப் பிரதேசத்தில் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ஒரே பாடசாலையில் அதிபர்களாக சேவையில் இருந்த 77 அதிபர்கள் காணப்பட்டதுடன் ஒரே பாடசாலையில் சேவைக்காலம் 20 ஆண்டுகளை மிகைத்த 04 அதிபர்களும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 53 அதிபர்களும் இருந்தனர். | குறித்த பாடசாலை வகைகளின் பிரகாரம் அதிபர் தரத்திலுள்ளவர்களை நிரப்புவதற்கு அறிவுறுத்தல்கள் அனைத்து வலய கல்வி பணிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. | திட்டவட்டமான இடமாற்றக் கொள்கையொன்று பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | கல்வி அமைச்சு செயலாளரின் (வரிசை) 2021 ஏப்ரல் 28 ஆந் திகதிய 06/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் இருக்க வேண்டிய கல்விசார பதவியணியினரின் கீழ் சிலாபம் வலய கல்வி அலுவலகங்களில் பிரதேசத்திற்குரிய பாடசாலைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்கள் மறையே 324, 37 மற்றும் 36 மற்றும் அதிபர், பிரதி அதிபர் மற்றும் உதவி அதிபர் பதவிகளில் வெற்றடங்களின் எண்ணிக்கை முறையே 41, 43 மற்றும் 45 ஆக இருந்தன. | மாகாணத்தில் காணப்படும் சகல வெற்றிடங்களுக்காக புதிய ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கு வடமேல் மாகாண கல்வி அமைச்சிற்கும் வரிசை அமைச்சடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளன. | வெற்றிடங்கள் மிகை முகாமை செயப்பட்டு கல்வி நடவடிக்கை களுக்கு தடைகளை குறைக்கும் வகையில் பேணிச்செல்லல் வேண்டும். |
| (iii) | மஹவ வலயக் கல்வி அதிகாரப் பிரதேசத்தின் 55 பாடசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட அதிபர் தரத்திற்குரிய பாடசாலை களுக்காக பொருந்தும் வகையில் அதிபர் தரத்தில் அதிபர்கள் இருக்கும் போது தரத்தின் பிரகாரம் சமப்படுத்தப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பாடசாலை வகைகளின் பிரகாரம் அதிபர் தரத்திலுள்ளவர்களை இணக்கம் செய்வதற்கு அறிவுறுத்தல்கள் அனைத்து வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. | திட்டவட்டமான இடமாற்றக் கொள்கையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

1.5.8 **தலைப்பு – 220 - வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, காணி, மின்சார மற்றும் எரிசக்தி, விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள், கலாச்சார மற்றும் கலை அலுவல்கள், தகவல் மற்றும் தொழில்நுட்ப அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சர்**

---

**எதிர்பார்க்கப்பட்ட விளைவினை (output) பெற்றுக் கொள்ளாமை**

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கூட்டுறவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நோக்கமாக மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்களின் கீழ் கிடைக்கும் நிதியத்தை பயன்படுத்தி கூட்டுறவு முயற்சி சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கோள்வது என குறிப்பிடப்பட்டிருந்த போதும் அந்த ஒட்டுமொத்த நோக்கத்தை நிறைவேற்று வதற்கு 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 7,700,000 செலவில் மேற்கொண்டு மஹவ கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம் மற்றும் கேட்போர் கூடம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. | மஹவ, கல்கமுவ, பொல்பிதிகம போன்ற குருநாகலில் இருந்து தூரத்தில் உள்ள பிரதேசங்களுக்கு உரிய சங்கங்களின் உத்தியோகத்தர்களுக்கு குருநாகல் உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து சேவை வழங்குவதற்கு நேர்ந்தமை. அவர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு அண்மித்த அலுவலகம் ஒன்று இல்லாததன் பேரில் 2016 ஆம் ஆண்டின் போது மஹவ உதவி ஆணையாளர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட அலுவலகத்திற்கு போதியளவு இடவசதிகள் இல்லாமை மற்றும் கூட்ட மண்டபம் ஒன்று இல்லாமை போன்ற காரணங்களால் புதிய கட்டிடம் ஒன்றை நிர்மானிப்பதற்கு 2018 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்தது. | ஒட்டுமொத்த நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அமைச்சினால் "உச்சமுனி" கடற்கரை கிராம வீடுகள் 135, மற்றும் 10 மீன்பிடி துறைமுகங்கள் என்பவற்றிற்காக 2018 திசெம்பர் 21 ஆம் திகதி ரூபா 12,207,948 தொகை செலவிடப்பட்டு சூரிய சக்தி மின்கல தொகுதிகள் வழங்கப்பட்டு இருந்த போதும் 2022 ஜனவரி 20 ஆம் திகதி கணக்காய்வு வெளிக்கள பரிசோதனை சந்தர்ப்பம் வரை அந்த சூரிய சக்தி மின் தொகுதிகள் செயலற்ற நிலைமையில் இருந்தன. | வடமேல் மாகாண பொறியியலாளர் திணைக்களத்தினால் பதில் வழங்கப்பட்டதன் பின்னர் இதற்கான பதிலை சமர்ப்பிக்கின்றேன். | செயற்திட்டம் தோல்வி அடைந்தமைக்கான காரணங்களை இனங்கண்டு செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.8.1 வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் நடைமுறைக் கணக்கில் ரூபா 26,344,048 அளவிலான பொதுவான மீதியொன்று மீளாய்வாண்டின் முழுவதும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | கூட்டுறவு சங்கங்களால் கடன்தொகை கோரும் போது தேவையான தொழிற்படு மூலதனத்தை இக்கணக்கில் நிறுத்தி வைப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | தேவையான பண மீதியை இனங்கண்டு மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த கடனின் கீழ் செலுத்தப்படாத கடன்களுக்குரிய நீதிமன்ற நடைமுறைகள் மூலம் நீதிமன்றத் தண்டப்பணமாக அறவிட்டு கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்திற்கு நீதிமனறத்திடமிருந்து | சிலாபம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் | இத்தொகையை குறித்த உரிய கூட்டுறவு சங்கங்களுக்கு விரைவில் வழங்குவதற்கு |

| | | |
|---|---|---|
| கிடைத்திருந்த ரூபா 65,504,446 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு விடுவிக்கப் பட்டிருக்கவில்லை. | பெப்ரவரி மாதம் அளவில் வழங்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.9 தலைப்பு 221 – வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

-----------------------------------------------------------------------------------------------------------------------------

**(அ) செயற்பாட்டு வினைத்திறனின்மை**

---------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | சிலாபம் மற்றும் மஹவ கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக அதிகார பிரதேசத்தில் 17 சங்கங்களனி திரட்டிய நட்டம் ரூபா 180,015,752 ஆக இருந்ததுடன் தொடர்ந்தும் நட்டம் அடைந்த அச்சங்கங்களை தொடர்ந்தும் நட்டமடையும் சங்கங்களை இனங்கண்டு இலாபமடையும் நிலைமைக்கு வருவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | சிலாபம் மற்றும் மஹவ கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்திடமிருந்து பதில் வழங்கப்பட்டதன் பின்னர் பதிலை சமர்ப்பிப்பதாக அறிய தருகின்றேன். | திணைக்களத்தினால் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான வழகாட்டல் வழங்கப்பட வேண்டும் |
| (ii) | 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் 43(I) ஆம் பிரிவு மற்றும் 1973 கூட்டுறவு விதி 43(II) இன் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் தேறிய இலாபத்தில் 10 சதவீதத்திற்கு மேற்படாத மற்றும் ரூபா 5 இற்கு குறையாத தொகையொன்றை கூட்டுறவு நிதியத்திற்கு பங்களிப்பு தொகையாக ஒவ்வொரு | குளியாப்பிட்டிய மற்றும் சிலாபம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகங்களிலிருந்து பதில் கிடைத்த பின்னர் சமர்ப்பிப்பதாக அறிய தருகின்றேன் | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த பணத்தை அறவிட வேண்டும். |

ஆண்டும் செலுத்த வேண்டிய போதிலும் சிலாபம் மற்றும் குளியாப்பிட்டிய உதவி கூட்டுறவு ஆணையாளர் அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ்வாறு அறவிடப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 23,665,678 ஆக இருந்தது.

**(ஆ) முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | சிலாபம், குளியாபிட்டிய மற்றும் மஹவ கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக அதிகார பிரதேசத்தில் இடம்பெற்றிருந்த ரூபா 170,365,590 ஆன நிதி முறைகேடுகள் தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | குளியாப்பிட்டிய, மஹவ மற்றும் சிலாபம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகங்களில் இருந்து பதில் கிடைத்த பின்னர் சமர்ப்பிப்பதாக அறியத் தருகிறேன். | விரைவில் ஒழுக்காற்று பரிசோதனையை மேற்கொண்டு பணத்தை அறவிடுவதற்கு அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கூட்டுறவு நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த கடன்களில் தீர்க்கப்படாத கடன்களுக்குரிய நீதிமன்ற செயற்பாடுகள் இருக்கும் போது குறித்த நிலுவைக் கடனை செலுத்தாமல் சிறைத் தண்டனைக்கு உட்பட்ட நபர்களிடமிருந்து உரிய கடன் தொகையை அறவிடுவது | குளியாப்பிட்டிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து பதில் கிடைத்த பின்னர் சமர்ப்பிப்பதாக அறியத் தருகிறேன். | பிணைமுறி ஒன்று பெற்றுக்கொள்வதற்கு அல்லது அறவீடு தொடர்பாக ஏற்பாடுகளை தயாரித்துக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடர்பாக திட்டவட்டமான ஏற்பாடுகள் இல்லாமை காரணமாக ரூபா 34,855,000 தொகை அவ்வாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ஒன்றாக இருந்தது. | | |
| (iii) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் (வரிசை) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்க பதிவாளரின் 2020 மே 18 ஆம் திகதிய கூ.அ.மு.வ/10/05 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ரூபா 54,077,834 பெறுமதியான அத்தியவசிய உணவுப் பொருட்கள் வடமேல் மாகாண கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப் பட்டிருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேலும் தீர்வு செய்யப்பட வேண்டிய தொகை 18,325,600 ஆக இருந்தது. | பின்னர் பதில் அளிப்பதாக அறியத் தருகிறேன். | குறித்த பணத்தை தாமதம் இன்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(இ) ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 14,848,184 கிரயத்திலான மஹவ கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலக கூட்ட மண்டபத்தை நிர்மாணிப்பதற்கான அளவீட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அளவினை மிகைத்து ரூபா 3,572,020 கொடுப்பனவு செய்யப் பட்டிருந்தமை, மதிப்பிடப்பட்ட அளவினை விட குறைத்து | மாகாண பொறியியலாளர் திணைக்களத்தில் இருந்து பதில் கிடைத்த பின்னர் சமர்பிப்பதாக அறியத் தருகிறேன். | ஆரம்ப பொறியியல் சார் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

நிறைவேற்றப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 2,201,796 ஆக இருந்தமை, மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 2,007,840 ஆன 30 வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாமை மற்றும் 18 மேலதிக வேலை விடயங்களுக்காக ரூபா 2,471,835 செலவிடப்பட்டிருந்த காரணத்தினால் கட்டிட நிர்மாணத்திற்குரிய திட்டம் மற்றும் மதிப்பீட்டு தயாரிக்கும் போது கருத்தில் கொள்ளக்கூடிய அளவு ஆரம்ப பொறியியல்சார் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப் படாதிருந்தமை அவதானிக்கப்பட்ட துடன் மேலதிக வேலை விடயங்கள் பெறுகை செயற்பாட்டிலிருந்து விலகி மேற்கொள்ளப்பட்டதனால் போட்டி கேள்வி சமர்ப்பித்து அதன் பிரகாரம் சரியான ஒப்பந்ததாரர்களைத் தெரிவு செய்வது இல்லாமல் போய் இருந்தது.

**1.5.10 தலைப்பு 222- வடமேல் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்**

---

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் வரை 23 பிரதேச செயலகப் அதிகார பிரதேசங்களிலிருந்து 03 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்டகால நிலுவை குத்தகை மீதி ரூபா 64,631,285 உம் 2-3 இற்கு இடைப்பட்ட | நிலுவை குத்தகையை அறவிடுவதற்கு முடியுமான அனைத்து நடவடிக்கை களையும் பிரதேச செயலகங்கள் ஊடாகவும், திணைக்களங்கள் ஊடாகவும் எடுக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் | நிலுவை குத்தகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளாக இருந்ததுடன் நிலுவை குத்தகை மீதி ரூபா 28,067,705 ஆக இருந்தது. | சட்ட ரீதியாக நடவடிக்கைகளை எடுத்தல் நடைமுறை சாத்தியம் அற்றதால் இயலுமானவரை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 2017 மார்ச் 08 ஆம் திகதிய 2019/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வர்த்தக ரீதியாக நீர் வாழ் செய்கைக்காக தேசிய நீரியல் வாழ் அபிவிருத்தி அதிகாரபைக்கு ஆரச்சிகட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 39.85 ஹெக்டேயர் அளவிலான காணி வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 32.38 ஹெக்டேயர் அளவொன்று 2017 ஆம் ஆண்டின் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 200 செயற்திட்டங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் அச் செயற் திட்டங்களை செயற்படுத்தாமை காரணமாக அரசுக்கு வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் தற்போது அக் காணியில் புற்கள் வளர்ந்து காணப்பட்டன. | இக் காணியின் ஒரு பகுதியில் 50 ஏக்கர், கம்பனி ஒன்றுக்கும் 29 ஏக்கர் அகில இலங்கை பல்தின கப்பல் உரிமையாளர் கம்பனிக்கும் நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த அமைச்சரவை தீர்மானம் இரத்து செய்யப்பட்டதன் பேரில் அந் நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன. இக் காணிப் பகுதியை கடற்றொழில் அமைச்சுக்கு முறையாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை தேசிய நீரியல் வாழ் உயிரின அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரின் NQ/1/12/4/33 ஆம் இலக்க மற்றும் 2022 ஜனவரி 07 ஆம் திகதி கடிதத்தின் மூலம் வேண்டு கோல் விடுக்கப்பட்டுள்ளது. | அரசின் காணிகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.11 தலைப்பு - 230 வட மேல் மாகாண சுகாதார, உள்நாட்டு மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள், மகளிர் அலுவல்கள் மற்றும் சபை அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சர்**

**முகாமைத்துவ செயற்றிறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள 46 பிரதேச செயலக பிரிவுகளில் தாபிக்கப்பட்டுள்ள மகளிர் சங்கங்களில் 414 மகளிர் சங்கங்கள் செயலற்ற நிலையில் காணப்படுகின்றன. | வெவ்வேறான காரணங்களின் அடிப்படையிலும் Covid 19 நிலைமை அடிப்படையிலும் செயலற்று உள்ள சங்கங்களை புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஊக்குவிப்பு மகளிர் சங்கங்களாக நடத்திச் செல்ல வேண்டுமெனவும் விரைவில் செயலற்ற சங்கங்களை இயக்குமாறு மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | செயலற்ற சங்கங்களை இயங்கும் சங்கங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.12 தலைப்பு 231- வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்**

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்ளுடனான இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) மாகாண நிதி விதி 83.5 பிரகாரம் உறுதிச்சீட்டுகளை அங்கீகரித்தல் சான்றுறுதிப்படுத்தல் ஒரே உத்தியோகத்தரால் மேற்கண்ட கூடாத போதும் புத்தளம் மாவட்ட சுகாதார சேவைகள் அலுவலகத்தின் மாவட்ட சுகாதார சேவை | இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உங்களுக்கு எதிர்காலத்தில் அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மாகாண நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பணிப்பாளரால் ரூபா 11,860,455 பெறுமதியான 57 உறுதிச்சீட்டுகள் அங்கீகரித்தல் மற்றும் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. | | |
| (ii) மாகாண நிதி விதி 169.1 இன் பிரகாரம் சான்றுறுதிப்படுத்தப்படுகின்ற உத்தியோகத்தரால் அனைத்து கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் உறுதிப்படுத்தப்பட்ட வேண்டிய போதிலும் புத்தளம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ரூபா 437,091,515 பெறுமதியான 16 உறுதிச் சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எதிர் காலத்தில் உங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மாகாண நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஆரம்ப சுகாதார சேவைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மிளாய்வாண்டில் புத்தளம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் ரூபா 1,618,500 ஆன 13 கணனி நோட் புக் (note book) மற்றும் ரூபா 1,627,200 ஆன 12 கணனி முறைமைகளும் கொள்வனவு செய்யப்பட்டு 13 சுகாதார உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் அந்நிறுவனங்கள் ஆரம்ப சுகாதார சேவை பலப்படுத்தும் திட்டம் (PSSP) செயற்படுத்தப்படவில்லை. | இவ்வேலை விடயம் DLI 5 இன் கீழ் 2021 PSSP திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்களை கொள்வனவு செய்து குறித்த வைத்திய சாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. | நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். |

அவ்வாறே இச்செயற்திட்டத்தின் நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகளுக்குரியதல்லாத ரூபா 7,796,392 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**(இ) செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மருத்துவ வளங்கள் திணைக்களம் (MSD) இடமிருந்து 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு கிடைத்திருந்த மருந்துகளில் ரூபா 20,359,065 பெறுமதியான மருந்துகள் தரத்தில் சித்தியடையாதிருந்த மருந்துகள் காணப்பட்டதுடன் ரூபா 33,923,933 பெறுமதியான மருந்துகள் காலாவதியாகி காணப்பட்டன. | 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை குருநாகலை மாவட்டத்தில் காலாவதியாவதற்கு அண்மித்திருந்த மருந்துகள் தேவைப்பாட்டின் பிரகாரம் வேறு நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் மருந்துகள் காலாவதியானமை தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு அனைத்து நிறுவன தலைவர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன. | மாதாந்த மருந்து குழுவை கூட்டுவதற்கும் மென்பொருள் முறைமையை ஒவ்வொரு வைத்தியசாலைகளிலும் நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | குருநாகல் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 44 வைத்தியசாலைகளுக்கிடையே மருந்துகள் காலாவதியாவதும் தொடர்பாக மருத்தவ வழங்கல் முகாமைத்துவ தகவல் முறைமை (MSMIS) பிரிவு 05 வைத்தியசாலை களில் மாத்திரமே நிறுவப்பட்டுள்ளன. | ஏனைய சுகாதார நிறுவனங்களிலும் கட்டம் கட்டமாக இம்முறையை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு வைத்திய வழங்கள் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த தரவு முறைமையை விரைவில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## (ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான 251 அரசின் விடுதிகள் காணப்பட்டதுடன் அதில் 135 வீடுகளில் குடியிருப்பதுடன் 21 வீடுகள் வேறு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. குடியிருப்பதற்கு பொருத்தமற்ற 67 அரசின் வீடுகள் பயன்பாடின்றி விளைவற்று காணப்பட்டதுடன் 28 வீடுகள் முழுமையாக உருக்குலைந்து காணப்பட்ட வேறு செயற்பாடு களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள 21 அரசின் வீடுகளில் 13 மாகாண பிரதான செயலாளரின் அங்கீகாரமின்றி மருத்துவ முகாம்களுக்காக அறைகளாக பயன்படுத்தப்பட்டிருந்தன. | மாகாண பிரதான செயலாளரின் அங்கீகாரமின்றி உத்தியோகபூர்வ வீடுகளை மருத்துவ முகாம்களுக்கான அறைகளாக பயன்படுத்துமாறு அனைத்து நிறுவனத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளதாகவும் வைத்தியசாலைகளில் நோயாளர் உதவிச் சேவைகளுக்காக அத்தியவசிய மருத்துவ அறைகளை பேணிச் செல்வதற்கு தேவையாக இருப்பதால் பயன்படுத்தக்கூடிய வீடுகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. | அரசின் வீடுகளை ஏனைய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தும் போது முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் |

## (உ) முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 81 ஏக்கர் 01 ரூட் 35 பேர்ச் முழு அளவிலான காணியில் 03 ஆரம்ப வைத்தியசாலைகள் 24 பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் 54 ஆரம்ப சிகிச்சை பிரிவுகளின் 26 சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் 13 நிறுவனங்களின் 120 காணி அலகுகள் திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை | காணி கையேற்றல் சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் சில கையேற்றல்களுக்காகநீதமின்றத்தில் வழக்குகள் காணப்படுவதுடன் காணி கையேற்றல் மற்றும் கையேற்றல் சிக்கலான செயற்பாடொன்றாக இருந்தது. | குறித்த ஆதனங்களை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஊ) பதவியணியினர் நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் விபரங்களின் பிரகாரம் 104 பதவி பெயர் களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 8399 ஆக இருந்ததுடன் தற்போது சேவை புரியும் பதவியணியனர் 7023 பேராக இருந்தனர். 71 பதவிகளுக்கான வெற்றிடங்கள் 1744 மற்றும் 11 பதவிகளில் 368 மிகைகளும் காணப்பட்டன. | வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு இடையே நேரடியாக மாகாண சபைக்கு ஆரம்ப தரத்திற்குரிய பதவியணியினருக்காக ஆட்சேர்ப்பு செய்ய முடியுமாக இருப்பதுடன் புதிய ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடம் பெறாமையால் அது தொடர்பான ஆலோசணைகள் கிடைத்த பின்னர் குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியும். ஏனைய பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்காக வரிசை சுகாதார அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தேவைப்பாட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணினர் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. | வெற்றிடங்கள் / மிகை என்பவற்றை சீராக்கவும் தேவையான பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.13 தலைப்பு – 232 -வடமேல் மாகாண ஆயுர்வேத திணைக்களம்**

**பதவியணியினர் நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திற்கு 08 விசேட வைத்திய உத்தியோகத்தர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 04 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன. | விசேட வைத்திய உத்தியோகத்தர் பதவிகள் உட்பட ஏனைய மருத்துவ உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் பதவி உயர்வு | குறித்த நிறுவனத்துடன் தொடர்புகொண்டு வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| ஆகையால் மாகாணத்தின் மக்களுக்கு ஆயுர்வேத மருத்துவ முறை ஊடாக பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்கூடிய சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | வழங்கல் போன்ற அனைத்தும் நாவின்ன ஆயுர்வேத மருத்துவ திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.14 தலைப்பு – 233 - வடமேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்குரிய 23 முதியோர் இல்லங்கள், 07 விசேட தேவைப்பாடுகளுடைய பிள்ளைகளின் திறன் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் 06 வலது குறைந்தோர் விதிவிட நிலையங்கள் என்பவற்றை காணி திணைக்களத்திற்கு கையேற்கப் பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்குரிய கையேற்றல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத 20 வீடுகள் மற்றும் காணிகள் அக்காணிகளை கையளிப்பதற்கு உரிய அமைப்புக்கள் விருப்பத்தை தெரிவிக்காமையால் கையளிக்க முடியாதிருந்ததுடன் கையேற்றல் / கையளிப்பு நடவடிக்கைகள் 16 காணிகளுக்கு மாத்திரமே கையேற்ககூடியதாக இருந்தது. அக்காணி கையேற்றல் / கையளிப்பு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கையேற்றல் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்பட கையேற்கப்பட வேண்டும். |

**1.5.15 தலைப்பு – 234 வடமேல் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங் களுடனான இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய கொம்ரோலர் ஜனராலின் 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் | காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீட்டிற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| திணைக்களத்திற்குரிய காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**1.5.16 தலைப்பு – 240 வட மேல் மாகாண வீதி, போக்குவரத்து, வீடமைப்பு மற்றும் நிர்மாண, கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான மாகாண அமைச்சர்**

---

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அமைச்சிற்குரிய உத்தியோக பூர்வ விடுதியொன்று குருணாகல் நகர பிதாவின் பயன்பாட்டிற்காக 2021 நவம்பர் 06 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகபூர்வ விடுதிக்கு மாதாந்த வாடகை தாபன விதிக்கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 5 இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ வீட்டுக்குரிய மாதாந்த வாடகை தாபன விதிக்கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 5 இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் அல்லது படியொன்று 12.5 சதவீதமான தொகையொன்று அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் குருணாகல் மாநகர சபையினால் அப்பணத்தை அறவிட்டு அமைச்சிற்கு அனுப்பியிருக்கவில்லை. | தாபன விதிக்கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 5 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகபூர்வ விடுதியின் நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.16.1 வடமேல் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் மாதாந்த ஓட்ட குறிப்புகள் கட்டணங்கள் ரூபா 15,735,000 மற்றும் அதற்குரிய ரூபா 2,509,000 தொகையான தாமதக் கட்டணங்கள் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கு குறித்த தரப்பினர் உள்ளடக்கப்பட்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழு மூலம் அறவிடுவதற்கு உள்ள நிலுவைத் பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை மாதாந்த ஓட்டக்குறிப்பு கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2013 ஜனவரி 1 ஆம் திகதி முதல் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குரிய அதிகார சபைக்கு பெறவேண்டிய ரூபா 3,201,000 ஆன நுழைவு பத்திர கட்டணங்கள் மற்றும் ரூபா 466,300 ஆன தாமதக் கட்டணங்கள் என்பவற்றை அளவிடுவதற்கு முடியாதிருந்தது. | நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்குரிய தரப்பினர் உள்ளடக்கப்பட்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் நிலுவைத் தவணையை இயலுமான வரையில் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை மாதாந்த நுழைவு பத்திர கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குரிய அதிகார சபைக்கு பெறவேண்டிய மேலதிக பிரயாண வருமான கட்டணங்கள் ரூபா 3,419,000 மற்றும் தாமத கட்டணங்கள் ரூபா 733,400 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | 2019 முதல் 2021 திசம்பர் 31 வரை நிறுவனத்திற்கு பெற வேண்டிய மேலதிக பயணக் தடவை வருமானங்களில் இருந்து 2022 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ரூபா 312,000 தொகையும் தாமதக் கட்டணங்களில் இருந்து ரூபா 34,000 தொகையும் அறவிடப்பட்டிருந்தது. | பெறவேண்டிய மேலதிக பிரயாண தடவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அதிகாரசபையின் புதிய அலுவலக தொகுதியை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் | அதிகாரசபையை நடாத்திச் செல்லப்படும் காணியை கையேற்கும் நடவடிக்கைகள் போக்குவரத்து அமைச்சின் | காணி முறை பிரகாரம் கை ஏற்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ஆண்டின் கணக்காய்வு திகதி வரை மாகாண நிச்சயக்கப்பட்ட நிதியம் ரூபா 61,283,694 மற்றும் அதிகார சபை நிதியத்தில் இருந்து ரூபா 11,810,415 என ரூபா 73,094,019 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் மீளாய்வண்டின் இறுதி வரையிலும் குறித்த காணி கையேற்கப்பட்டிருக்கவில்லை. | மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | எடுக்கப்பட வேண்டும். |

**1.5.16.2 வடமேல் மாகாண வீடமைப்பு நிர்மான மற்றும் அபிவிருத்தி நிதியம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 இன் 04 ஆம் இலக்க வடமேற்கு மாகாண வீடமைப்பு மற்றும் நிர்மாணம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 02 ஆம் பகுதியின் 9 (i) பிரிவிற்கு இணங்கும் வகையில் வடமேல் மாகாண வீடமைப்பு மற்றும் நிர்மாண அபிவிருத்தி நிதியம் 2012 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டு வடமேல் மாகாணத்தினுள் வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி செயல் திட்டங்களை செயல்படுத்துதல், கூட்டினைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் பின் தொடர் நடவடிக்கைகளை எடுத்தல் என்பன அடிப்படை நோக்கங்களாக இருந்த போதும் நிதியத்தால் 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய் வாண்டின் இறுதிவரை ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை 04 மாத்திரம் ஆக இருந்ததுடன் அதில் இரண்டு செயற்திட்டங்களின் வேலைகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | “நிலைபேறான iv செயற் திட்டத்தின் நடவடிக்கைகள் இறுதி கட்டத்தில் காணப்படுவதுடன்” நிலை பேறான v செயற்திட்டத்தின் கீழ் அடுக்கு மாடிகள் வீட்டு தொகுதி நிர்மாணிப்பதற்கு நிதியத்தின் நிர்வாக சபை தீர்மானித்துள்ளது. | நிதியத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.17 தலைப்பு 241 வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம்

---

**முகாமைத்துவ வினைத்திறனின்மை**

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்குரிய ரூபா 54.35 மில்லியன் ஆன 14 வாகனங்கள் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்பட்டிருந்த போதும் அவ் வாகனங்களை கை வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல வருடங்களாக எமது அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த இவ் வாகனங்களை எதிர்காலத்தில் விரைவில் கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறியத் தருகிறேன். | ஏனைய நிறுவனங்களின் மூலம் திணைக்களத்திற்கு கிடைத்துள்ள வாகனங்களை முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.18 தலைப்பு 242 வடமேல் வீடமைப்பு நிர்மாணத் திணைக்களம்

---

**முகாமைத்துவ வினைத்திறனின்மம்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச அடமானம் மற்றும் முதலீட்டு வங்கியுடன் இணைந்து செயற்படுத்தப்பட்டிருந்த வடமேல் மாகாண திரிய நிவச கடன் முன்மொழிவு முறைமையின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன்களுக்குரிய 102 கடன் பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,340,515 ஆன நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | வங்கியில் காணப்படும் பொதுவான கடன் அறவீடு முறையின் கீழ் கடன்கள் அறுவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் 16 கோவைகளுக்காக சட்ட நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அரச அடமானம் மற்றும் முதலீட்டு வங்கியால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.19 தலைப்பு 243 வடமேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்**

**முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வடமேல் மாகாண உள்நாட்டு மற்றும் பாரம்பரிய கைத்தொழில் மேம்படுத்தல் மற்றும் இருப்பிற்குரிய தொழிற்பயிற்சி வழங்குவது இத் திணைக்களத்தின் ஆரம்ப செயற்பணியுடன் நோக்கமாக இருந்தபோதும் பயிலுனர் பயிற்றுவித்தல் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையை 771, 360 மற்றும் 247 ஆக 2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2020 ஆம் ஆண்டில் 53 சதவீதமும் 2021 ஆம் ஆண்டில் 68 சதவீதமாகவும் குறைவடைந்து இருந்தது. | பயிற்சிக்காக ஆட்சேர்க்கப்பட்ட பயிலுனர்களின் குறைவிற்கு கொரோனா நிலைமை காரணமாக கல்வி மற்றும் தொழில் பயிற்சி பிரிவுவை மூடிவிட்டமை ஏனைய தொழில்களுக்காக நிகழ்நிலை முறைமையை பயன்படுத்தி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பயிலுனர்கள் முன்வந்தமை மற்றும் காலத்துடன் இளைஞர் தொகுதி வெவ்வேறு பயிற்சி சந்தர்ப்பங்களுக்காக தொடர்பு பட்டமை போன்ற காரணங்கள் பிரதானமாக தாக்கம் அளித்திருந்தது. | உள்நாட்டு மற்றும் பாரம்பரிய கைத்தொழில் மேம்படுத்தல் மற்றும் நிலைத்திருப்புக்குரிய தொழிற்பயிற்சி வழங்குவதற்கு முறையான நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**1.5.19.1 வடமேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் விடய இலக்கம் 24302 மூலப் பொருள் வழங்கல் உள்ளடங்களாக தொழில்நுட்ப பாடசாலையை நடத்திச் செல்வது தொடர்பான வர்த்தக முற்பண கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | யாப்பஹுவ தச்சு மற்றும் பரகம்மன தும்பு கைத்தொழில் நிறுவனம் அமைந்துள்ள முறையே ரூபா 800,000 ரூபா 600,000 பெறுமதியான காணிகளை திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் காணிப் | யாப்பஹுவ மற்றும் பரகம்மன ஆகிய நிலையங்களின் காணிகளின் உரித்து திணைக்களத்திற்கு இல்லாமல் இருந்ததால் கணக்கு கூற்றிலும் காணி பதிவேட்டிலும் அகற்றப்பட்ட தாக தயவுடன் அறியத் தருகிறேன். | தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணிகளை காணி பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் கையேற்கப்படாத காணிகளை கையேற்பதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டு இருந்தது. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 16,000,000 பெறுமதியான உதாரகம மட்பாண்ட கைத்தொழில் நிறுவனம் அமைந்துள்ள காணி, காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தாக உள்ளதுடன் மீளாய்வாண்டு வரையிலும் அது கையேற்கப்பட்டிருக்கவில்லை. | இக்காணியை கையேற்பதற்கு தேவையான கடித நடவடிக்கைகள் மேலும் தொடர்ச்சியாக இடம்பெறுவதாக தயவுடன் அறியத் தருகிறேன். | குறித்த கையேற்பு விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | வர்த்தக முற்பண கணக்கிற்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 93 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,102,970 ஆன நிலுவை கடன் மீதியாக இருந்தது. | பதவிநிலை உத்தியோகத்தளுடன் கூடிய கடன் மீதிகளை பதிவழித்தல் தொடர்பான குழு ஒன்றை நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழு அறிக்கையின் மூலம் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.19.2 வடமேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் விடய இலக்கம் 24303 (மூலப் பொருள் வழங்கல் உட்பட புடைவைக் கைத்தொழில் நிலையங்களை பேணிச் செல்லுதல் தொடர்பான வர்த்தக முற்பணக் கணக்கு)**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய மொத்த கடன்பட்டோர் மீதியான ரூபா 23,398,164 இல் 01 ஆண்டு முதல் 23 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 9,880,130 ஆன மீதி ஒன்று காணப்பட்டது.<br>. | முன்னைய ஆண்டுகளில் கடன் அறவீடு அல்லது அறிவித்தல் தொடர்பாக இதுவரை பரிந்துரைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது 2013 மற்றும் 2014 கடன் அறவீடு தொடர்பாக முறையான ஒழுக்காற்று பரிசோதனைகள் காணப்படுவதுடன் அதற்கு மேலதிகமாக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்டமா அதிபர் | பெறவேண்டிய கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்திக்கு அறிவிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ஜனசலு நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் நடத்திச் செல்லப்படும் 68 இடங்களுக்குரிய காணி மற்றும் கட்டிடங்களின் உரித்து கையேற்கபட்டிருக்கவில்லை. அத்துடன் நிதி கூற்றுக்களின் பிரகாரம் அந்த ஆதனங்களின் பெறுமதி ரூபா 23,400,000 ஆக இருந்தது. | காணி மற்றும் கட்டிடங்களின் கையேற்றல் சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதுடன் கையேற்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தயவுடன் அறியத் தருகிறேன். | காணி மற்றும் கட்டிடங்களை கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.5.20 244 வடமேல் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம்**

**செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வல்பொல குடிநீர் செயற்திட்டத்திற்குரிய கிணற்றை அமைத்தல் நீர் மோட்டார் அறையை அமைத்து மோட்டாரை பொருத்துதல், நீரை சேகரித்து அதற்கான தாங்கிய நிர்மாணித்தல் மற்றும் அதுவரை நீர் குழாய்களை பதித்தல் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், பிரதேசத்தின் மக்களுக்கு தேவையான நீரை வழங்குவதற்கு மீளாய்வாண்டின் ரூபா 4,308,220 ஒதுக்கீடு செய்யப்பட்டு காணப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடு மீளாய்வாண்டின் இறுதிவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை மற்றும் பொருட்கள் சேவைகளை வழங்குவதில் சிக்கல்கள் பேரதிலும் அதிகமாக பொருட்களின் விலை அதிகரித்தல் காரணமாக கொண்டு இன் நிர்மாணத்தின் நிர்மான நடவடிக்கைகளை உரிய திகதியில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | செயத்திட்டத்தின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டு நலனாளிகளுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.21 250 - வடமேல் மாகாண விவசாய, நீர்ப்பாசன, கடற்றொழில், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார மற்றும் கமநல அபிவிருத்தி அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சர்**

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வரும் கடற்றொழில் மேம்பாடு சுழற்சி நிதியத்தை ஆரம்பிப்பதற்கு சாசனத்தின் மூலம் அல்லது விதிகள் தொகுதி ஒன்றின் மூலமோ அங்கீகாரமொன்று மாகாண சபையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிதியத்திற்காக வரைவு விதிக் கோவை ஒன்று சட்டப்பிரிவுக்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியத் தருகிறேன். | சாசனம் / சட்ட விதிகள் தாமதம் இன்றி தயாரிக்கப்பட வேண்டும். |

**1.5.21.1 விடய இலக்கம் 25002 தொழில் முயற்சி சேவை ஒன்றிணைந்த இன விருத்தி பண்ணை – மாவத்தகம**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாணத்திற்கு பொருத்தமான உயர்ந்த உற்பத்தி ஒன்றையும் தரமான இலட்சணையுடன் கூடிய உயர்ந்த வகை பசு மாடுகளை உருவாக்கி துறைக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு மாவதகம கால்நடை இன விருத்தி பண்ணை நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டு வரை ரூபா 3,762,207 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் 2022 பெப்ரவரி 03 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட நிலைய பரிசோதனை சந்தர்ப்பம் வரை மேற்படி நோக்கத்தை | இந்த பண்ணை அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP) செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கால்நடை இனவிருத்தி பண்ணையை இயங்கும் பண்ணையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதமையால் குறித்த கட்டிடங்கள் விளைவற்றும் காணப்பட்டன.

**1.5.21.2 விடய இலக்கம் 25003 வாரியபொல இழைய ஆய்வுகூட வர்த்தக முற்பணக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வாரியபொல இழைய ஆய்வுகூட வர்த்தக முற்பணக் கணக்கிற்குரியதாக மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,041,010 பெறுமதியான மூலப்பொருள் இருப்பொன்று மீளாய்வாண்டிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் ஆய்வுகூட செயற்பாடுகள் இடம்பெறாமல் இருந்ததுடன் அதன் பபிரகாரம் மூலப்பொருள் இருப்பில் எவ்வித வேறுபாடொன்றும் இடம்பெறவில்லை. | மூலப்பொருள் இருப்பு காலாவதியாவதற்கு முன்னர் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

**1.5.21.3 வடமேல் மாகாண பிரதேச வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையின் நிலுவை வருமானம் ரூபா 43,475,845 ஆக இருந்ததுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய, வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தி டமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,150,000 ஆன மீதி ஒன்றும் இருந்தது. | ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 114,850 ஆன பணத்தை அறவிடுவது தொடர்பான எழுத்து மூல வேண்டுகோள் பல இதுவரை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் "ஈ செவன் லங்கா" தனியார் கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 480,000 ஆன தொகையை அறவிடுவது தொடர்பாக உள்ள சிக்கல்களை தீர்வு செய்வதற்காக வடமேல் மாகாண பிரதான செயலாளர் | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகத்தின் சட்டப்பிரிவிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அதிகார சபையால் 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மீன் உற்பத்தி தயாரிப்பு செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட தற்போது குறை பயன்பாட்டில் காணப்படுகின்ற சொத்துக்களின் கிரயம் ரூபா 3,909,360 ஆக இருந்ததுடன் அச்சொத்துக்களின் 2014 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட பெருமதி ரூபா 1,850,000 ஆக இருந்ததுடன் தற்போதைய மதிப்பீட்டு பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | இந்த அதிகாரசபையில் விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் பரிந்துரை மற்றும் குறை பயன்பாடுடைய சொத்துக்களின் மதிப்பீட்டு அறிக்கையின் பரிந்துரை அடிப்படையில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் இந்த உபகரணங்கள் வடமேல் இயந்திர உபகரண அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை முழுமையாக பயன்படுத்துவதற்கோ அல்லது தேவையான ஏனைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.5.22 தலைப்பு 251 - வடமேல் மாகாண விவசாயத் திணைக்களம்**

---

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்குரிய வருடக் கணக்காக பயன்படுத்தபபடாத பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த 10 வாகனங்களை முறையாக நிறுவனத்திலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது கைதவிர்ப்பதற்காக பிரதான செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அச்செயற்பாட்டின் இறுதியில் முறையாக பதிவேடுகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | விளைவற்ற / வாகனங்களை முறையாக நிறுவனத்திலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.22.1 வடமேல் மாகாண விவசாய திணைக்களத்தின் 25102 ஆம் இலக்க "பண்ணை அலுவல செயல்படுத்தல் மற்றும் விதை நெல் வழங்கள்" இற்கான வர்த்தக முற்பணக் கணக்கு**

---

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதி ரூபா 5,476,589 ஆக இருந்ததுடன் அதற்குரிய கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வு ஒன்று காணப்படவில்லை. | இவ்வாண்டிலிருந்து கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பண்ணைகளை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். | கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1918 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த 104 ஏக்கர் அளவிலான வாரியபொல அரச பண்ணை அமைந்துள்ள காணி வடமேல் மாகாண விவசாய திணைக்களத்திற்கு கையளிக்கப் படாதிருந்ததுடன் தற்போது பண்ணை இடத்தில் வேறு 07 வகையான அரச நிறுவனங்களின் கட்டிடங்களையும் அலுவலகங் களையும் நிர்மாணிப்பதற்காக காணி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அந்த காணி அளவு திட்ட வரைபடம் மூலம் எழுத்து மூலம் கையளிக்கப்பட்டு இருக்கவில்லை. | பண்ணை நிலத்தின் உரித்தை கையேற்பதற்காக தற்போது அளவிடல் நடவடிக்கைகளுக்காக வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முறைப்படி கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வாரியபொல அரச பண்ணையின் ரூபா 4 மில்லியன் பெறுமதியான "ஜோன் டீயர்" இணைந்த அறுவடை செய்யும் இயந்திரமொன்று 2015 ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் வரை விளைவற்று காணப்பட்டது. | இவ் இயந்திரத்தை நிக்கவரட்டிய விதை மற்றும் உபகரண நிலையத்திற்கு கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | சொத்துக்களை பயனுள்ள செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.23 தலைப்பு 252 - வடமேல் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

---

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கையளிப்பு செயற்திட்டத்தின் கீழ் கால்நடைகளை பெற்றுக் கொண்ட விவசாயிகளால் குறித்துக்காலப் பகுதிக்குரிய (4 ஆண்டுகள்) மிகைத்ததன் பின்னர் அடுத்து வரும் விவசாயி ஒருவருக்கு ஒரு கால்நடையை வழங்க வேண்டிய போதிலும் அளவ்வ மற்றும் வாரியபொல கால்நடை அதிகார பிரதேசத்தில் அவ்வாறு வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறே கால்நடையின் பெறுமதியை பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையளிப்பு செயற்திட்டத்திற்குரிய கால்நடை வைத்திய அலுவலக மட்டத்தில் காணப்படும் சிக்கல்களை தீர்வு செய்வதற்கு பெற்றுக் கொண்டவற்றை விடுவிப்பதற்கோ அல்லது நியாயமான காரணங்கள் காணப்பட்டால் புத்தகங்களில் இருந்து பதிவேற்பதற்கு நடைமுறை ஒன்றை பின்பற்றுவதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன. | செயத்திட்டங்களின் நோக்கங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் ரூபா 1,469,000 செலவிட்டு பாலுடன் அண்மித்து உற்பத்திகளை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றின் இயந்திரங்களை செயற்படுத்தும் முறைமையை ஸ்தாபிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருந்த போதும் ஹோமோஜென சியரச இயந்திரத்தின் Starter பகுதி செயற்படாமல் இருந்த காரணத்தால் இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | தற்போது ஹோமோஜென சியரச இயந்திரத்தின்''Stsrter'' பகுதி புதிதாக பொருத்தி முறைமையை செயற்படுத்தக்கூடிய கட்டத்தில் காணப்படுவதாக குறிப்பிட விரும்புகிறேன். | மொத்த முறைமையும் செயற்பாட்டு நிலைமையைக்கு கொண்டு வர வேண்டும். |

**1.5.24 தலைப்பு - 253 - வடமேல் மாகாண நீர்ப்பாசன திணைக்களம்**

**தாமதமான செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண நிச்சயக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் மீளாய்வாண்டில் செயற்படுத்தப் பட்ட ரூபா 7,945,669 மதிப்பிடப்பட்ட கிரயத்திலான 11 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 1,128,892 செலவிடப்பட்டிருந்த போதும் அச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | காணப்பட்ட அதிக மழை காரணமாக நீர்ப்பாசன செயல்திட்டங்கள் நீரினால் நிரம்பிமை மற்றும் கொரோனா தொற்று காரணமாக இச் செயட்திட்டங்களை பூர்த்தி செய்ய முடியாது இருந்தது. | கால கட்டத்தினுள் செயற்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.25 தலைப்பு 260 - வடமேல் மாகாண பிரதான செயலாளர் அலுவலகம்**

**வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1002.04.03 ஆம் வருமான குறியீட்டு இலக்க கல்லு மற்றும் தரவாளை மற்றும் 1002.04.05 ஆம் இலக்க உள்நாட்டு மதுபான அனுமதிப் பத்திரங்களுக்குரிய 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய நிலுவை வருமானம் ரூபா 11,207,011 ஆக இருந்தது. | ரூபா 2,416,668 ஆன கள்ளுத் தரவானை வருமானத்தை பதிவழிப்பதற்கு மதுவரி ஆணையாளரின் பரிந்துரைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 7,990,343 ஆன நிலுவைக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ரூபா 800,000 தொகையான இந்நாட்டு மதுபான அனுமதிபத்திர வருமானம் கிடைக்க வேண்டிய நிறுவனம் தற்போது மூடப்பட்டுள்ளதுடன் அது | நிலுவை வருமானத்தை தாமதம் இன்றி அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொடர்பாக மதுவரி ஆணையாளரிடமிருந்து அறிக்கை ஒன்றை பெற்றுக்கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |

**1.5.26 தலைப்பு - 261 - வடமேல் மாகாண உள்ளக கணக்காய்வுத் திணைக்களம்**

**செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி அறிக்கையின் பிரகாரம் 20 உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டு இருந்த போதும் கணக்காய்வு செயற்பாடுகளை மேற்கொள் வதற்கு தகைமையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் நடைமுறை ஒன்று அங்கீகரித்துக் கொண்டிருக்க வில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறை தற்போது தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் இறுதிக்கட்டத்தில் காணப்படுகின்றது. அதனை அங்கீகரித்ததன் பின்னர் குறித்த உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு உத்தியோகத்தர் களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் கணக்காய்வுக்கு உட்படுத்த வேண்டிய 1840 நிறுவனங்கள் அளவில் காணப்பட்ட போதும் மீளாய்வு ஆண்டில் 315 நிறுவனங்களில் மாத்திரம் கணக்காய்வினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு பின்னர் அது 293 ஆக திருத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கணக்காய்விற்கு | 2021 ஆம் ஆண்டில் கணக்காய்வு செயற்பாடுகளுக்காக இருந்த உத்தியோகத்தர் அளவு 25 ஆக இருந்தாமையால் ஆண்டினுல் இந்த சகல நிறுவனங்களையும் மேவுகை செய்யும் வகையில் செயற்படுத்தல் சிரமாக உள்ளது. 315 நிறுவனங்களின் கணக்காய்வு செயற்பாடுகளை மேற்கொள்ளதிட்டமிட்ட போதும் | உள்ளக கணக்காய்வினை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
| --- | --- | --- |
| உட்படுத்த வேண்டிய நிறுவனங்களுக்கு இடையே உள்ளக கணக்காய்வுத் திட்டத்திற்கு 16 சதவீதம் அளவிலான குறைந்த அளவே உள்ளடக்கப்பட்டிருந்தது. | கோவிட் தொற்று நிலைமையில் உத்தியோகத்தர்களை நிறுவனங்களுக்கு அனுப்ப முடியாதமையால் அந் நிறுவனங்கள் 293 ஆக திருத்தம் செய்யப்பட்டது. | |

**1.5.27 தலைப்பு 262 வடமேல் மாகாண கொள்கை திட்ட அமுலாக்கம் மற்றும் செயற்படுத்தும் திணைக்களம்**

---

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) வடமேல் மாகாணத்திற்காக 2020 முதல் 2024 வரை ஐந்து ஆண்டு மத்திய கால அபிவிருத்தித் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்காக கிடைத்த நிதி ஏற்பாடுகளில் இருந்து 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 9,820,784 ஆனா செலவினம் மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் அதில் 59 சதவீதம் அதாவது ரூபா 5,813,984 மாகாண, மாவட்ட, பிரதேச மட்டத்தில் செயலமர்வுகள் மற்றும் வெளிக்கள அவதானிப்புகள் மற்றும் போக்குவரத்து எழுதி கருவிகள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தன. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அபிவிருத்தி திட்டம் சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கும் நடவடிக்கைகள் மாத்திரம் | வடமேல் மாகாணத்திற்குரிய தொலைநோக்கினை அடிப்படையாகக் கொண்ட ஒன்றிணைந்த நிலைபேறான அபிவிருத்தி திட்டம் 2020-2024 தயாரிக்கும் போது நடைமுறை சாத்தியமாக இருப்பதற்காக கிராமிய, பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூலம் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் ஆங்கிலப் பிரதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் சிங்களப் பிரதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | திட்டத்தை செயல்படுத்துவதற்கும் சிங்கள பிரதியை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை

| | | |
|---|---|---|
| (ii) மாகாண முதலீட்டு நிகழ்ச்சி திட்டத்திற்காக இணையதளத்தை அடிப்படையாகக் கொண்ட தகவல் முகாமைத்துவ முறைமை ஒன்றை நிர்மாணிக்கும செயற் திட்டத்திற்காக வடமேல் மாகாண பிரதான செயலகத்தினால் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி பிரிவின் பணிப்பாளருடன் 2018 செப்தம்பர் 01 ஆம் திகதி மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2019 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அச்செயற் திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச்செயற்திட்டம் நிறைவு பெறாது இருந்தவுடன் அதற்காக ரூபா 3,803,156 தொகையான செலவினம் ஒன்று இடம் பெற்று இருந்தது. | நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலக நடவடிக்கைகள் வழமையாக செயல்படுத்தப்படாத காரணத்தினால் இணையதளத்தை அடிப்படையாகக் கொண்ட விசேட தொழில்நுட்ப செயற்பாடுகளான காரணங்களினால் இதனை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | குறித்த தகவல் முகாமைத்த முறைமை விரைவில் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.5.28. தலைப்பு 263 வடமேல் மாகாண வருமான திணைக்களம்**

**(அ). வருமான முகமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 124,031,163 ஆக இருந்ததுடன் அதில் | ரூபா 50.77 மில்லியன் ஆன மேலதிக முத்திரை கட்டணங்கள் நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 36.3 மில்லியனுக்காக வழக்கு | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக போதிய அளவு நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| ஓராண்டிற்கு மேற்பட்ட பழைய அறவிடப்படக் கூடிய மீதி ரூபா 103,692,694 ஆக இருந்தது. | தொடுக்கப்பட்டுள்ள துடன் ரூபா 9.66 மில்லியன் தொகையை பிரதான செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டு பதிவழிக்கப் பட்டது. வியாபார புரள்வு வரி ரூபா 29,878,804 ஆன மீதி ஒன்றிலிருந்து ரூபா 9.9 மில்லியன் பதிவழித்தல் மற்றும் எஞ்சிய பணத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வேண்டும். |

**(ஆ) பதவியணியினர் நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண இறைவரி ஆணையாளர் பதவி 2018 மே 18 ஆம் திகதி முதல் மாகாண வருமான பிரதி ஆணையாளர் ஆகிய இரண்டு பதவிகள் 2009 ஏப்ரல் 08 மற்றும் 2009 ஆகஸ்ட் 12 ஆந் திகதி முதல் வெற்றிடங்களாக இருந்தன | வெற்றிடமாக காணப்படும் மாகாண இறைவரி ஆணையாளர் பதவிக்காக 2020 செப்தம்பர் 15 ஆம் திகதி வரை ஒப்பந்த அடிப்படையிலும் அத் திகதியில் இருந்து இதுவரை சிரேஷ்ட மதிப்பீட்டு உத்தியோகத்தர் ஒருவர் பதவியில் கடமை நிறைவேற்றும் அடிப்படையிலும் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன். | சிரேஷ்ட மட்டத்தின் பதவிகளுக்காக நிரந்தர நியமனங்களை வழங்குவதனை துரிதப்படுத்துதல் வேண்டும். |